தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰௫	மலர்
௪அ	ஆனந்த, புரட்டாசி (1974 — செப்டம்பர் — அக்டோபர்)	௬

யாழ் நூல்

புலவர். க. வெள்ளைவாரணம்,
பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,

பாரத நாட்டின் தென்பகுதியாகிய தமிழ்நாட்டிலே பன்னூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றி வளர்ந்த இசைக் கலையின் நுட்பங்களையும் பண்டைத் தமிழர் அமைத்து வாசித்த இசைக் கருவிகளுள் மிகவும் சிறப்புடைய யாழ் எனும் நரம்புக் கருவியின் அமைப்பினையும் ஆயிரம் ஆண்டுகளாக வழக்கற்று மறைந்துபோன அக்கருவியினை ஆதாரமாகக் கொண்டு தோன்றிய ஏழ்பெரும்பாலை பன்னிரு பாலை, நூற்றுமூன்று பண்கள் எனும் இசை உருவங்களையும், சங்க காலத்திற்குப் பின் இடைக் காலத்தில் இசைக் கலையில் நேர்ந்த மாற்றங்களையும் இக்காலத்தில் வழங்கும் கர்நாடக சங்கீதத்தின் எழுபத்திரண்டு மேள கர்த்தா ராகங்களையும் கணிதம், பௌதீகம் எனும் விஞ்ஞான நூல்களின் துணைகொண்டும் சங்க இலக்கியம் சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்களின் துணைகொண்டும் சங்கீத ரத்நாகரம், சதுர்தண்டிப் பிரகாசிகை முதலிய வடநூல்களின் துணைகொண்டும் நுண்ணிதின் ஆராய்ந்து விளக்கும் இசைத் தமிழின் இலககண நூலாக விளங்குவது அருள்மிகு விபுலாநந்த அடிகள் இயற்றிய யாழ் நூல் ஆகும்.

இந்நூலின் ஆசிரியராகிய விபுலாநந்த அடிகளார், இலங்கையில் மட்டக் களப்பினைச் சார்ந்த காரேறு மூதூரில் வாழ்ந்த வேளாண் செல்வர் சாமித் தம்பியார் கண்ணம்மையார் எனும் இருவருக்கும் தவப் புதல்வராக 1892 மார்ச்சு 29-இல் பிறந்தவர்;

ஆங்கிலமும், தமிழும், விஞ்ஞானமும் பயின்று லண்டன் பி. எஸ்ஸி. பட்டமும் மதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதச் சிறப்பும் ஒருங்கு பெற்றுக் கல்லூரி முதல்வராய் பணி புரிந்தவர். ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் துறவியாய் அச்சங்கத்தின் கல்வி நிலையங்கள் பலவற்றை நடத்தும் பொறுப்பினை மேற்கொண்டு பொது நலப் பணி புரிந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தும் இலங்கை பல்கலைக் கழகத்தும் முதன் முதல் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமாகும் வழித் துறைகளை வகுத்தமைத்தவர். ஆங்கிலம் தமிழ் ஆரியம் ஆகிய மும்மொழியும் பயின்று விஞ்ஞானத் துறையிலும் இசைத் துறையிலும் ஈடுபாடுடையராய்ச் சிறந்த கலை நூல்கள் பலவற்றைத் தமிழ் மொழி வாயிலாக வெளிப்படுத்துதல் வேண்டும் என்னும் சிறந்த குறிக்கோளுடன் தமிழுக்கு ஆக்கமாகும் நற்பணிகள் பல புரிந்தவர்.

'' நரம்பின்மறை '' எனத் தொல்காப்பியரும் '' இசையொடு சிவணிய யாழின் நூல் '' எனக் கொங்குவேளிரும் குறிப்பிட்ட யாழ்நூற் பொருளாகிய இசை யுருவங்களும் அவற்றை வாசித் தற்குரிய கருவியாகத் தமிழ் மக்கள் அமைத்துக் கொண்ட யாழ் எனும் நரம்புக் கருவியும் இருந்த இடந்தெரியாது மறைந்து போன இக்காலத்திலே பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள் வாசித்த யாழ்க் கருவியினையும் அதன்கண் வாசிக்கப்பட்ட பழந் தமிழ் இசை நுட்பங்களையும் இசையுலகுக்கு எடுத்துக்காட்டி தமிழிசைக்குப் புத்துயிர் அளித்தல் வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் பதினான்கு ஆண்டுகளுக்கு மேலாக இரவும் பகலும் இடைவிடாது ஆராய்ந்து யாழ் நூல் எனும் இசைத் தமிழாராய்ச்சி நூலை அருள்மிகு விபுலாநந்த அடிகளார் இயற்றி உதவினார்கள். கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் சேரன் செங்குட்டுவன் என்னும் மன்னவன் தம்பியாகிய இளங்கோ வடிகளால் இயற்றப்பட்ட முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதி காரத்திலே அரங்கேற்று காதையிலே யாழாசிரியனது இயல்பு கூறிய இருபத்தைந்து அடிகளுக்குரிய விரிவுரைபோன்று இவ் யாழ் நூல் அமைந்துள்ளது இசைத்திறம் அனைத்தும் அறிஞர் சிலரால் ஒரு காலத்தில் திடீரெனப் படைக்கப் பட்டன வாகா மல் நானிலமக்களாகிய பொது மக்களது அன்றாட வாழ்க்கை யிலே தோன்றிக் காலந்தோறும் படிப்படியாக வளர்ந்து பண் பட்ட வரலாற்றினை இந்நூல் தெளிவாக விளக்குகின்றது. இந்நூல் 1. பாயிரவியல் 2. யாழுறுப்பியல் 3. இசை நரம்பியல் 4. பாலைத்திரிபியல் 5. பண்ணியல் 6. தேவார இயல் 7. ஒழிபியல் எனும் எழு பகுதிகளை உடையது.

1. பாயிரவியல்

இதன்கண் இசை நரம்புகளின் பெயர், முறை அவற்றிற்குப் பிற்காலத்தார் வழங்கிய பெயர்கள் இணை, கிளை, பகை, நட்பு, நரம்புகள், இசை, பண் என்பவற்றின் பெயர்க் காரணம் மந்தரம், மத்திமம், தாரம் எனும் மூவகைத் தானங்கள், ஆரோகணம், அவரோகணம் என்னும் ஏற்ற இறக்கங்கள். மிடற்றுப் பாடலும், கருவிப்பாடலும், பாணர் வரன்முறை தமிழர் வழங்கிய யாழ் கருவி எகிப்து. சுமேரியா, கிரேத்தம் முதலிய பிறநாடுகளுக்குப் பரவிய வரலாறு முதலியன இடம் பெற்றுள்ளன. குரல், துத்தம். கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பழந்தமிழர் குறித்த ஏழிசைச் சுரங்கள் முறையே மத்திமம். பஞ்சமம், தைவதம், நிஷாதம், ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம் என இக்காலத்தில் வழங்கும் ஏழிசைகளைக் குறித்த பெயர்கள் என்னும் உண்மை இவ்வியலில் தெளிவாக விளக்கப் பெற்றது

2. யாழுறுப்பியல்

இதன்கண் வில்யாழ், பேரியாழ், மகரயாழ், சீறியாழ், செங்கோட்டியாழ். சகோடயாழ் என்னும் யாழ்க் கருவிகளும் அவற்றின் உறுப்புக்களாகிய பத்தர், கோடு, வறுவாய், போர்வைத்தோல். யாப்பு. உந்தி, மாடகம். கவைக்கடை என்பனவும் அவற்றின் பயனும் அவற்றை இக்காலத்தில் உருவாக்கி வாசித்தற்கு ஏற்ற முறையில் வரைபடங்களுடன் தெளிவாக விளக்கப் பெற்றன.

3. இசைநரம்பியல்

பௌதீக நூன் முறைப்படி ஓசையை அளக்கும் முறையும் அளவு கோலும். ஓசையின் இயக்கமும் வேகமும் புல்லாங்குழல் என்னும் துளைக் கருவியின் இலக்கணமும், ஓசையை அளத்தற்குரிய கட்டளை யாழை அமைத்துக் கொள்ளும் முறையும், நரம்பின் முதலிசையைச் சார்ந்து தோற்றும் வழியிசைகளும், கிளை மரபாக இசை கூட்டும் முறையும், ஏழிசைகளின் பிறப்பும் அலகெண்ணும், அலகு நிலை எண்ணும், கிளை இயைபினுல் பிறக்கும் பதினொரு சுருதிகளும், நட்பியைபினுல் பிறக்கும் பதினொரு சுருதிகளும் மேனுட்டில் வழங்கும் ரிஷபக் கிரமமும் சுருதி வீணையின் அமைப்பும், இசை நரம்புகளின் சிற்றெல்லை

யும், பேரெல்லையும், மெலிவின் மெலிவு, மெலிவு, சமன் வலிவு, வலிவின் வலிவு வலிவு முக்கோடு, வலிவு நற்கோடு என்னும் இசையின் எழுவகைத் தானங்களும், முற்றிசையின் பிரிவுகளும், பன்னிரு இராசி வீடுகளிலும் இசை நரம்புகள் நிற்கும் முறையும் இவ்வியலில் விரித்து விளக்கப் பெற்றன.

4. பாலைத்திரிபியல்

பாலை என்னும் சொல் வழக்கும், மூர்ச்சனைகளாகிய ஏழ் பெரும் பாலைகளும், இசை நிலை இராசிகளும், பன்னிரு பாலையின் பொது உருவங்களும், ஏழ்பெரும் பாலைகளைக் காந்தாரக் கிரமம், ஷட்ஜக் கிரமம், மத்திமக் கிரமம் என்னும் மூன்று கிரமங்களிலும் பன்னிரு பாலைகளையும் கருவியிலே தோற்றுவித்தலும், வட்டப்பாலை இடமுறைத்திரிபும், எதிர் நிரல் நிறைப் பாலைகளும், பஞ்சமக் கிரமம், ரிஷபக் கிரமம், புதிய ரிஷபக் கிரமம் என்பனவும் கிரமங்களுக்கிடையே அமைந்த தொடர்பும் சகோட யாழ்க்கருவிக்கு இசை கூட்டும் முறையும், சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் யாழாசிரியன் அமைதி கூறிய செய்யுட் பாகத்துக்கு உரையும் இவ்வியலில் இடம் பெற்றுள்ளன.

5. பண்ணியல்

இதன்கண் பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்னும் நாற்பெரும் பணிகளும், இருபத்தொரு திறங்களும் அவை அகநிலை, புறநிலை, அருகியல் பெருகியல் என வகைக்கு நான்காகி முறையே பதினாறும் எண்பத்துநான்கும் ஆதலும், அவற்றுடன் தாரப்பண் திறம், பையுள் காஞ்சி, படுமலை என்னும் மூன்றும் கூட்டி எண்ணப், பண்கள் நூற்று மூன்றுதலும் நூற்று மூன்று பண்களின் பெயர்களும், பாலை நிலையும், பண்ணு நிலையும், மத்திமக் கிரமம், ஷட்ஜக் கிரமம், பஞ்சமிக் கிரமம், ரிஷபக் கிரமம், காந்தாராக் கிரமம் எனும் ஐந்து கிரமங்களிலும் ஏழ்பெரும் பாலைகள் எய்தும் இசை நிலையும், பன்னிரு பாலையின் உருவும், திணைப் பண்களின் பாலை நிலையும், நரம்படைவும், நூற்று மூன்று பண்களையும் சுருதி வீணையில் அமைத்துக் காட்டுதலும், பழந்தமிழ் இசை மரபிற்கும் வடநாட்டு இசை நரம்பிற்கும் இடையே அமைந்த தொடர்பும், சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையில் அமைந்த முல்லைப் பண்ணும், வேனிற் காதையில் அமைந்த மருதப் பண்ணும், திரி

கோணப்பாலை, சதுரப் பாலை பற்றி விளக்கமும் இடைக்காலத்து வழக்கில் நாற்பெரும் பண்களின் நால்வகைச் சாதிகளும் நன்கு விளக்கப் பெற்றன.

6. தேவாரவியல்

இசைப் பாவகையும், தேவாரம் என்னும் பெயர்க் காரணமும், தேவாரப் பதிகங்களில் ஒவ்வொரு பண்ணுக்கும் அமைந்த கட்டளை வகையும். தேவாரப் பதிகங்களின் யாப்பமைதியும், பண் — இரதம் — தாளம் என்னும் மூவகைப் பாகுபாடும் தேவாரப் பதிகங்களின் இசையமைதியும், சங்கீத ரத்நாகரத்திற் குறிக்கப் பெற்ற தேவாரப் பண்கள் சிலவும் இவ்வியலில் விரித்துரைக்கப் பெற்றன.

7. ஒழிபியல்

இசையாராய்ச்சிக்கு இன்றியமையாத எண்ணளவை இசைக் கணிதம் என்னும் கணித நூல் பற்றிய முடிபுகளும் நாற்பத்திரண்டு சுருதிகளும், சிரம வழக்கு வேறுபட்ட இசைக் காலத்துச் சுருதிகளும், அஹோபல பண்டிதரும் வேங்கட மகஷியும் கொண்ட சுருதிகளும், கொங்குவேளிர் பெருங் கதையிற் குறிக்கப்பட்டதும் ஆயிரம் நரம்பு தொடுக்கப்பட்டதும் ஆகிய பெருங்கலம் எனும் பேரியாழின் நரம்பமைதியும், கி. பி. ஏழாம் நூற்றுண்டில் மகேந்திரவர்மப் பல்லவனுல் குடுமியா வரையில் வரையப்பெற்ற இசைக் கல்வெட்டின் விளக்கமும், இக்காலத்தில் தென்னுட்டுச் சங்கீதத்தில் வழங்கும் எழுபத்திரண்டு மேளராகங்களின் மூர்ச்சனைகளும், சங்கீத ரத்நாகமும் கூறும் காந்தாரக் கிரமத்தின் மூர்ச்சனைகளும், நரம்புக் கருவிகளை வாசிப்போர்க்குப் பெரிதும் பயனளிக்கின்ற இசைச் சுரங்களின் நிரல்களாகச் சங்கீத பாரிஜாத நூலாசிரியர் காட்டிய அலங்காரங்கள் என்னும் இசை உருவங்களும், அரபத்த நாவலர் தமது பரத நூலிலே கூறிய தாளங்களின் அமைப்பும். தொல்காப்பியனுர் காலமுதல் அருணகிரியார் காலம் வரை வளர்ந்து சிறந்த இசை நூல் வரன்முறையும், முடிபுரையாக இந்நூலாசிரியர் இசையாராய்ச்சி பற்றித் தெரிவித்த அரிய முடிபுகளும் இவ்வியலில் தெளிவாகக் காட்டப் பெற்றன.

தேவாரப் பண்களின் கட்டளை வகையினைப் புலப்படுத்தும் தேவார இசைத் திரட்டும், அடியாருக்கு நல்லாரும் அரும்

பதவுரை ஆசிரியரும் மேற்கோளாகக் காட்டியனவும் பிங்கலந்தையிற் காணப்படுவனவும் ஆகிய இசை நாடகச் சூத்திரங்களும் இந்நூலின் பிற்சேர்க்கையாகத் தரப்பெற்றுள்ளன.

இந்நூலின் ஆய்வு முறையும் ஆராய்ச்சியிற்கண்ட நுண்பொருள்களும்

ஆயிரமாண்டுகளாக வழக்கிழந்து மறைந்த யாழ்க்கருவியின் அமைப்பினையும், அதன்கண் வாசிக்கப்பெற்ற பழந்தமிழ் இசை நுட்பங்களையும் நுண்ணிதின் ஆராய்ந்து காணும் பணியினை மேற்கொண்ட இந்நூலாசிரியர் "மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்து கொண்டு, இனத்திற் சேர்த்தி உணர்தல் வேண்டும்" எனத் தொல்காப்பியனுர் அறிவுறுத்திய ஆய்வு முறையை மனத்திற் கொண்டு பண்டைத் தமிழ் நூல்களிற் காணப்படும் இசை நூற் குறிப்புகளை ஒருங்கு தொகுத்து வகைப்படுத்தி ஒப்பு நோக்கி ஆராய்ந்து விளக்கியுள்ளார். உதாரணமாக யாழ்க் கருவியின் இலக்கணம் பத்துப் பாட்டினுள் நான்கு பாட்டுக்களில் தனித் தனியே உவமை வாயிலாகக் கூறப்பட்டுள்ளது. ஓரிடத்திற் காணப்படாத சிறப்பியல்பு மற்றோர் இடத்திற் கூறியவாற்ருல் தெளிவு படுகின்றது இவ்வாறே நாற்பெரும் பண்களின் இலக்கணம் சிலப்பதிகாரத்தில் ஐந்து இடங்களில் தனித்தனியே கூறப்பட்டுள்ளன. அவை தம்மை ஒருங்கு வைத்து நோக்குமிடத்துப் பெரும் பண்ணின் இலக்கணம் தெளிவாகப் புலப்படுகின்றது என்பதனை ஆசிரியர் முடிவுரையில் எடுத்துக் காட்டுகின்ருர்.

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையின் உள்ளே யாழாசிரியன் அமைதி கூறும் இருபத்தைந்து அடிகளுக்கு இயைந்ததொரு விரிவுரையாகத் தொடங்கப்பெற்ற இவ் இசையாராய்ச்சி, மேலும் பல துறைகளில் விரிவடைந்து, வழக்கொழிந்து மறைந்த இசை நூலிலக்கணத்தை வகுத்துரைத்தும், நூற்றுமூன்று தமிழ்ப் பண்களின் இசையுருவத்தை நிரற்படுத்தித் தந்தும், அப் பண்களை இசைத்தற்கு வேண்டிய சுரங்களின் அலகு நிலைகளைக் குறிப்பிட்டும், வழக்கொழிந்து பல்லாண்டு மறைந்து கிடந்த பழந்தமிழ் இசை மரபுக்கு இந்நூல் புத்துயிர் அளிக்கின்றது. கிரம வழக்கு வேறுபட்டு நடக்கும் இக்காலத்தில் பண்டைக் காலத்தில் தமிழ்மக்கள் கொண்ட இருபத்திரண்டு சுருதிகள் என்பன இவையெனக்

காட்டியதுடன், இருபத்துமூன்ருவதாக நின்ற பிராமண சுருதி எனும் விதியிசையின் அளவினையும், அது அளவிற் சிறியதாயினும், எண்ணிக்கைக்கு ஈரலகுபெறும் என்னும் பேருண்மையினையும் நன்கு விளக்கிச் சுருதி வீணை என்னும் கருவியினைச் செய்து முடித்து, இடைக்காலத்தில் நேர்ந்த வழுவினை இந்நூல் களைந்தமை இசையாராய்ச்சிக்கு ஒளி வழங்கும் தன்மையதாகும். மேலும் ஐவகைக் கிரமங்களின் அமைப்பினைக் காட்டிக் கிரம வழக்கினைப் பண்டு போல் என்றும் நிலவச் செய்ததும் இந்நூலே ஆகும்.

கி. பி. ஏழாம் நூற்ருண்டில் குடுமியா மலையில் மகேந்திர வர்ம பல்லவனுல் வரையப்பெற்ற இசை நூற் கல்வெட்டின் பொருள் ஐயம்திரிபுகளுக்கு இடமின்றி இந்நூலில் தெளிவாக விளக்கப்பெற்றது.

எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களை வகுத்துத்தென்னுட்டுக் கருநாடக சங்கீதத்தை முறைப்படுத்திய வேங்கடமகி என்பார் கையாண்ட சதுர்தண்டிவீணை எனுங்கருவி, பஞ்சசுருதி ரிஷபத்தில் சுத்த காந்தாரமும், பஞ்சசுருதி தைவத்தில் சுத்த நிஷாதமும் பேசுவது முன்னூருண்டுகளாக வழக்கற்றுப்போன இக்கருவியினை மீட்டும் உருப்படுத்திக் காட்டி எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களின் இசையமைப்பினை விளக்கிய பெருமை இவ் யாழ் நூலுக்கு உரியதாகும்.

ஆயிர நரம்பு யாழின் கணக்கினைக் கண்டறிந்து, அவ் யாழினை மீண்டும் அமைப்பதற்கு வேண்டிய குறிப்புக்களை இந் நூல் ஐயந்திரிபற எடுத்துரைக்கின்றது.

அரங்கேற்றுக் காதையில் மாதவி வாசித்த யாழ் கருவியின் அமைப்பும், பாடிய இசையின் அமைப்பும் இந்நூலில் விரிவாகத்தரப் பெற்றுள்ளன. கோடபதி எனவும், சகோடயாழ் எனவும் பெயர் பெற்று விளங்கியதும், நிஷாதம் முதல் தைவதம் இறுதியாகப் பதினுன்கு நரம்புகள் தொடுக்கப் பெற்றதும் ஆகிய 'செம்முறைக்கேள்வி' என்னும் யாழ் கருவியின் இசை தமிழகத்தில் மீண்டும் பரவுதற்கு இந்நூல் துணை புரியும் என்பது இந்நூலாசிரியரின் உள்ளக் கிடக்கையாகும்.

இந்நூல் தேவாரவியல், மூவர் அருளிய தேவாரப் பதிகங்கள் முழுவதற்கும் யாப்பமைதி, கட்டளையமைதி, சுவையமைதி கூறியதுடன், வடமொழி நூல்களில் தேவாரத்துக்கு உரியன எனக் காட்டப்பட்ட தமிழ்ப் பண்களின் உருவங்களையுந் தந்து தேவாரத்தைப் பயில்வோருக்கு நற்பயன் தரும் இயல்பினதாய் அமைந்துளது.

சிலப்பதிகார அரங்கேற்றுக் காதை யுரையினுள்ளே அரும் பதவுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் எடுத்தாளுகின்ற பாலை இளி (ஷட்ஜம்) முதல் உழை (நிஷாதம்) ஈருகக் கீழி ருந்து மேல் நோக்கிச் செல்லும் குரற் (மத்திமக்) கிரமத்து எதிர் நிரல் நிறைக்கு உரியது என்பது யாழ் நூல் ள கரு—ஆம் பக்கத்தில் தெளிவாக எடுத்துக் காட்டப் பெற்றது.

இந்நூல் ஒழிபியலிற் கூறப்பெற்ற எண்ணலளவை, இசைக் கணிதம் என்பன இசையாராய்ச்சிக்கு இன்றியமையாதனவாகும். பழந்தமிழர் வழங்கிய பேரெண்கள் இவையெனவும், பேரெண் களைப் போலவே கீழ்வாயெண்களும் பொருள்களின் அளவினைத் துணிதற்குக் கருவியாவன எனவும். பேரெண்களையும் கீழ் வாயெண்களையும் கூட்டல். கழித்தல். பெருக்கல். வகுத்தல் செய்யும் முறைகள் இவையெனவும் மேனுட்டார் வழங்கும் லகு வெண்கள் (Logarithm) இத்தன்மைய எனவும் ஒழிபியலில் தெளிவாக உரைக்கப்பட்டன.

இசை நரம்புகளின் இலக்கணத்தைக் கூறுமிடங்களில், அவற்றின் அசைவென விகிதம். நரம்பு நீள விகிதம். சதவிலக் கம் எனும் இவற்றைக் கணக்கிடும் முறைகளும் ஒன்றுமுதல் இருபது வரையுமுள்ள எண்களின் சத விலக்கங்களைத் தரும் சூத்திரமும், துளைக் கருவியினை முறைப்படி அமைக்கும் வழியும், இருபத்திரண்டு சுருதிகளைத் தோற்றுவிக்கும் கணித முறையும். நாற்பத்திரண்டு சுருதிகளின் சத விலக்கங்களும் அசைவெண் விகிதங்களும் ஆயிர நரம்பு யாழுக்கு அடிப்படையாகிய இரு நூறு சுருதிகள் தோன்றும் முறையும். பிறவும் இந்நூலில் தெளிவு படுத்தப்பட்டன இருபத்திரண்டு சுருதிகளின் அள வினை வகுத்துரைக்கும் ஐந்து வெண்பாக்களும், அகோபல பண்டிதர் வழங்கிய பாரிஜாத வீணையின் அலகுகளை எடுத் துரைக்கும் ஐந்து கட்டளைக் கலித்துறைகளும் இந்நூலுக்கு அழகு செய்வனவாகும்

சங்க காலத் தொடக்கத்தில் தமிழ் நாட்டில் வழங்கிய நரப்புக் கருவியாகிய யாழ் என்பது. மருப்பு என்னும் கோடு வளையப் பெற்றதாய்க் கண்ணுக்கினிய தோற்றப் பொலிவின்றிச் செவி யாற்கேட்டு மகிழ்தற்கினிய இசை நலங்களைத்தரும் சிறப்புடைய தாய் விளங்கியது. இளங்கோவடிகள் காலத்தில் இக்கருவி யிலுள்ள கோடு என்னும் உறுப்பின் வளைவினைச் சிறிது மாற்றி நேராக்கிக் கண்ணுக்கினிய தோற்றம்வாய்ந்த செங்கோட்டி யாழ் முதலிய கருவிகள் அமைக்கப்பெற்றன. ஒவ்வொரு சுரத்திற்கும்

தனித்தனி நரம்பு கட்டப்பெற்றது பண்டைத் தமிழர் வாசித்த யாழ் கருவியாகும். ஒரு நரம்பிலேயே பல சுரங்களையும் வாசித்தற்கேற்ற தான நிலைகளைக் கொண்டது பிற்காலத்து வீணைக் கருவியாகும். ஒரே முறையில் தொடர்ந்து செல்லும் தொடரிசையினை வாசித்தற்குரியது வீணைக்கருவி, இத்தகைய தொடரிசையுடன் பலரும் சேர்ந்து பாடும் முறையிலமைந்த ஓத்திசைப் பண்களை வாசித்தற்கு ஏற்ற அமைப்புடையது யாழ்க் கருவியாகும். யாழும், வீணையும் இரு வேறு இசைக் கருவிகள் என்பதனைத் திருநாவுக்கரசரும், சேரமான் பெருமாளும் மாணிக்க வாசகரும், சேக்கிழாரும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். சங்கச் செய்யுட்களில் யாழின் அமைப்பினைப் பற்றியமைந்த குறிப்புக்களையும், அமராவதி, கோலி எனும் ஊர்களிற் கிடைத்த யாழ்க் கருவியின் உருவச்சாயலையும், தாராசுரம் திருவெருக்கத்தம்புலியூர் ஆகிய ஊர்களில் உள்ள திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருவுருவத்தில் அமைந்த சகோட யாழ்க்கருவியின் உருவத்தோற்றத்தையும் கூர்ந்து நோக்கிய விபுலாநந்த அடிகளார் யாழும், வீணையும் வெவ்வேறு கருவிகள் என்பதனைத் தெளிவாகவுணர்ந்து பன்னூருண்டுகளாக மறைந்தொழிந்த யாழ்க் கருவியினை உருவாக்கி, அக் கருவியின் வாயிலாகப் பண்டைத் தமிழ் மக்கள் கண்டுணர்த்திய இசைக்கலையின் நுட்பங்கள் உலகமெலாம் பரவும் வகை யாழ்நூல் என்னும் இசையாராய்ச்சி நூலினை இசை யுலகிற்கு வழங்கியுள்ளார்கள்

இந்நூலின் முதற்பதிப்பு திருக்கொள்ளம்பூதூர்த் திருப்பணிச் செல்வரும், செந்தமிழ்ப் பேரன்பருமாகிய நச்சாந்துபட்டி பெ. ராம. ராம. சிதம்பரஞ் செட்டியார் அவர்களின் பொருளுதவி கொண்டு 5—6—1947-இல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் வெளி வந்தது. இருபத்தேழாண்டுகளுக்குப்பின் இப்பொழுது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரால் இரண்டாம் பதிப்பாக வெளியிடப் பெறுகின்றது,

பண்டைத் தமிழிசையின் நுட்பங்களை வரலாற்று முறையிலும் ஆராய்ந்து விளக்கும் இவ் யாழ் நூலை இசை வாணர்களும், ஆராய்ச்சியாளர்களும் நன்கு பயின்று இந்நூலில் தரப்பெற்றுள்ள இசையாராய்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்பெறும் கணித முறைகளையும், பிற அரும்பொருட் குறிப்புக்களையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்து திசையனைத்தும் தமிழ் நாட்டின் இசை நலம் பரவத்துணை புரிவாராக.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை-2.

யாழ் நூல் வெளியீட்டு விழா

அருள்மிரு. விபுலானந்த அடிகளார் இயற்றிய இசைத் தமிழ் நூலாம் யாழ் நூலின் இரண்டாம் பதிப்பின் வெளியீட்டு விழா, திருவள்ளுவராண்டு 2005. ஆவணித்திங்கள் 6-ஆம் நாள் (22—8—74) வியாழக்கிழமை மாலை 6–30 மணி யளவில் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் நடைபெற்றது.

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரும். தஞ்சை நகராட்சி மன்றத் தலைவருமாகிய திரு. S. பெத்தண்ணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தம் வரவேற்புரையில், ''கரந்தைத் தமிழ்ச் சங்கமானது தோன்றிய நாளிலிருந்து தமிழுக்கும் தமிழர்க்கும் இடையறுப் பணியை இடையீடுபடாமல் ஆற்றி வந்திருக்கின்றது—வருகின்றது. இந்த நாட்டுக்குப் பயிற்று மொழியாக — பாட மொழியாக இந்தி வந்தபோது, தமிழ் நலம் காக்கப் போர்க்குரல் எழுப்பிய தமிழ்ச் சங்கத்தின் நற்றொண்டைத் தமிழகம் நன்கறியும்; தமிழறிந்தார் நன்கறிவர். அவ்வழியிலேயே மணிவிழாவின்போது முடிவு செய்த திட்டப்படி இன்று யாழ்நூலை வெளியிட்டுத் தமிழ்த் தாய்க்கு அணி செய்கின்றோம். இந் நூல் வெளிவர எங்கள் ஆக்கப்பணிக்கு ஊக்கம் கொடுப்பதைப்போல முதன் முதல் 1000 ரூபா வழங்கிய கரந்தை திரு. N. S. சண்முக வடிவேல் அவர்களுக்கும். இந் நூலைப் பதிப்பிக்கும் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பதிப்பித்த தோடமையாது 1001 ரூபா நன்கொடையும் வழங்கிய வித்துவான் க வெள்ளைவாரணனார் அவர்களுக்கும், 300 ரூபா வழங்கிய பொள்ளாச்சி திரு நா மகாலிங்கம் அவர்களுக்கும், 50 படிகளுக்காக 1000 ரூபா முன் பணமும் 100 ரூபா நன்கொடையும் வழங்கிய தில்லைத் தமிழ் மன்றத் தலைவர் திரு. R. கனகசபைப் பிள்ளை அவர்களுக்கும், 50 படிகளுக்கு முன் பணமாக 1000 ரூபா வழங்கிய கடலூர் T. K. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கும், நன்கொடையாக 3000 ரூபா வழங்க வாக்களித்து முன்பணமாக 1500 ரூபா வழங்கியருளிய தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர் திரு S. D. சுந்தரம் அவர்களுக்கும், 50 படிகளுக்கு முன்பணமாக 1000 ரூபா வழங்கிய சென்னைத் தமிழிசைச் சங்கத்தார்க்கும். 4 படிகளுக்கு முன்பணமாக 100 ரூபா வழங்கிய புதுக்கோட்டை சித. இராமன் செட்டியார் அவர்களுக்கும் இன்

னும் ஐம்பதும் இருபதுமாக வழங்கிய ஏனைய தமிழன்பர்களுக்கும் இப்பதிப்புப் பணியினை ஆர்வமுடன் ஏற்றுக் குறித்த காலத்தில் அழகுடன் அச்சிட்டு உதவிய அண்ணுமலை நகர் சிவகாமி அச்சகத்தின் உரிமையாளர் டாக்டர். கோ. இராசசுந்தரம், எம் ஏ, பி. எச். டி, அவர்களுக்கும் அன்போடு நன்றியுரைக்கின்றோம்" என்று கூறினுர்கள்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் M. L. C., அவர்கள் தம் தலைமையுரையில், "யாழ்நூலை யாத்து இசைத் தமிழுக்குப் பெருமை செய்த அருள்மிகு விபுலானந்த அடிகளாரவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியகாலை யான் மாணவனுகப் பயின்று கொண்டிருந்தேன். அவருக்குத் தொண்டு செய்யும் அன்பு மாணவனுகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான் அவரோடு இலங்கைக்குச் செல்லவும் விரும்பினேன். மிகச் சிறியவனுக இருந்ததால் என்னை விடுத்து எனது அன்பை மட்டுமே அழைத்துச் சென்ருர்கள்" என்ற செய்தியையும் நூலின் பெருமையையும் எடுத்துக் கூறி முதல் நூலை வெளியிட்டார்கள்.

யாழ் நூலை அழகாக அரும்பாடுபட்டுப் பதிப்பித்த அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத் துணைப் பேராசிரியர் வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனுர் அவர்கள் விழாத் தலைவர் அவர்களிடமிருந்து முதல் நூலைப் பெற்றுக் கொண்டு, ஆசிரியப் பெருந்தகையாராகிய அருள்மிகு. விபுலானந்த அடிகளாரவர்கள் பதினுன்கு ஆண்டுகள் இடைவிடாது முயன்று பலப்பல ஆராய்ச்சிகள் செய்து இயற்றிய இசைத் தமிழ் நூலாகிய யாழ்நூல் முதற்பதிப்பின் வெளியீட்டு விழா நாளும் தமிழ் வளர்க்கும் நங்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கச் சார்பில் 1947-ஆம் யாண்டு திருக் கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில் ஆளுடைய பிள்ளையார் முன்றிலில் நடைபெற்றது" என்பதனையும் அடிகளாரின் குண நலன்களையும் ஆன்ற புலமைத் திறத்தையும் உருக்கமாக எடுத்துரைத்து, இரண்டாம் பதிப்பு வெளிவர எல்லா வகையானும் அன்பும் ஆதரவும் ஊக்கமும் கொடுத்தருளிய சங்கத் தலைவர் திரு S. பெத்தண்ணன் அவர்களையும், சங்கப் பொருளாளரும் தாளாளருமாகிய திரு. ச சுந்தரம் B A., B. L., அவர்களையும், சங்கச் செயற்குழுவினராய பெருமக்களையும் போற்றி மொழிந்தார்கள்.

(171 ஆம் பக்கம் பார்க்க)

★ "இளமை"

ச பாலசுந்தரம், பேராசிரியர் க. பு. கல்லூரி

முன்னுரை

1

வளமை ததும்பும் பொன்னிமகள் வயல்கள் தோறும் நடமாடக்
குளுமை ததும்பும் செந்நெலொடு குவியும் கன்னல் மகிழ் பூக்கும்
களமும், கலைசேர் மன்றமொடு கற்றோர் குழுமும் கூடங்கள்
இளமை ததும்ப என்றென்றும் இலங்கும் சோழர் தலைநகராம்

2

விஞ்சைகமழ விளைவேறும் வீறும் சோறும் வழங்கிமகிழ்
தஞ்சைப் பதியில் தகவோடு தழைத்துத் தமிழைக் குழைத்தூட்டி
நெஞ்சைக் களிப்பு மழையாலே நிறைக்குந் தேனர் பணிபுரியும்
செஞ்சொல் இளைஞர் கழகத்தின் திதிக்கும் முதலாம்
ஆண்டுவிழா

3

சிறக்கப்போந்து வீற்றிருக்கும் தென்னன் தமிழ்கூர்
பெரியோர்காள்!
அறத்திற்கெல்லாம் தலையாய அறிவை நெறியால் வழங்கிமகிழ்
நிறைக்கும்பேராசிரியன்மீர்! நிலைக்குந்தொண்டு தமிழ்த்தாய்க்கு
மறுக்கம் இன்றிச் செய்தலென வாழும் எழில்சேர் மாணவர்காள்!

4

எல்லோருக்கும் என்னுள்ளம் இளகஇனிக்கும் வணக்கங்கள்
சொல்லேருழவர் நறுங்கவிஞர் தொகையாய் விளங்கும்
இவ் அவையில்
வல்லேனல்லேன் எனைப்பாட்டு மன்றத்தலைமை கொளச்செய்தீர்
நல்லோர் வழியிற் செல்லுமொரு நசைசேர் பாலன் எனக்கருதி

5

இப்பாலன் பாலிளவழகன் என்றிங்கழைக்கும் இயல்பாலே
முப்பாலின்பத் தமிழ்க்கடலுள் முழந்தாளிட்டு நிற்போனைத்
தப்பா இளமைக் கவியரங்கில் தலைமைதாங்கிப் பாடுகெனச்
செப்பாநின்றீர்! சிறுகிழவன் செப்பமுயல்வேன் செவிசாய்ப்பீர்!

★ 27—7—74ல் தஞ்சை இளைஞர் கழக ஆண்டு விழாவிற் பாடிய தலைமையுரைக் கவிதைகள்.

6

இளமைஎனக்குப் புதிதில்லை இற்றைக்கைந்தா றுண்டின்முன்
வளமைசான்ற இளைஞன்யான்வயதோரைம் பத்தொன்றெனினும்
கனிகொள் நெஞ்சத்தின்றைக்கும் காண்கட்டிளமைக் காளை எனின்
துளியும் ஐயம் இல்லைநரை தோன்றின் நசையும் நரைத்திடுமோ

7

பண்டுதமிழ்முப் பாலுணலிற் பாலன்எனினும். அதையுண்ண
மண்டிவருநன் மாணவர்க்கு மலைபோல் முதியன், அனுபவத்தைக்
கொண்டுமதிப்பின் கூனடையாக் குமரக்கிழவன். அதனுல்யான்
கண்டுகணித்த சிலவற்றை கழறவிரும்பிக் கவியாலே

8

நுவல்கின்றேன் அன்புடையீர்! இவ்வரங்கில்
நுண்ணறிவு சான்ற இளங்கவிஞர் ஐவர்
தவஇளமை, கடவுள்.பெற் றோர்கள், கல்வி
சலிப்பில்லாக் காதலொடு நட்பு.ப் பற்றி
நவகவிதைத் தேன்விருந்து நல்குதற்கு
நசையோடு வீற்றுள்ளார் இவர்கள் எல்லாம்
புவிவாழ இனிமணக்கும் பூக்கும் மொட்டு
புதியசுவைக் கனிவழங்கல் பொலியும் பிஞ்சு

---

169 ஆம் பக்கத் தொடர்ச்சி

பின்னர், பதிப்பாசிரியர் திரு க. வெள்ளைவாரணனர் அவர்களுக்கு விழாத் தலைவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் அளித்த பொன்னுடையைப் போர்த்திச் சிறப்புச் செய்தார்கள். விழாத் தலைவரவர்கள் ''தம்மிடம் நேரில் இந்நூலைப் பெறுபவர்க்கு 7-50 ரூபா குறைக்கப் பெற்று 20 ரூபாவுக்கு விலை விற்பனை செய்யப் பெறும்'' என சங்கத்தார் கருத்தை அறிவிக்க, உடனே தமிழன்பர்கள் பலரும் அடிகளாரின் அருட்கரங்களால் நூலைப் பெற்று சங்கப் பணிக்கு உதவினர்கள். கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வர், புலவர் திரு. பி விருத்தாசலம் M. A, அவர்கள் நன்றி நவில நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நடைபெற்றது.

9

தேனேடு மணமில்லா வண்ணப் பூக்கள்
தெய்வத்தின் பூசனைக்குச் சிறவா. மற்றும்
மானேடுவிழி மடவார் மகிழ்ந்து சூடார்
வளத்தோடு வண்ணமுமங் கில்லை என்றல்
கானேடு வளர்கின்ற புதராய் எண்ணிக்
கடிந்தொதுக்கிக் கனல்மூட்டி எரித்துநிற்பார்
ஊனேடு கலக்குகின்ற சுவையும், அட்டி
உண்பதற்கும் ஒவ்வாத காயை யாரும்

10

பொருட்டாக மதிப்பதிலைப் பொலிவு சான்ற
புத்திளமை புவிசெழிக்க வளரா தாயின்
முருட்டான முடமரமாய் வெறப்பென் கின்ற
முள்வாளால் தகர்த்தொழிக்க உலகம் எண்ணும்
இருட்டான கூடத்தில் ஏற்றி வைத்த
எழிற்சுடராய் இளைஞர் ஒளி வீசவேண்டும்
குருட்டாட்டம் ஆடுவதால் உலகத்திற்குக்
குன்றிமணி யளவேனும் பயனுண்டாமோ?

11

வீரத்தோ டழகெழுச்சி விரைவு வீறு
மென்மையொடு களிப்பிவையே இளமைஎன்று
சாரத்தோ டியம்புவர். புன்முறுவல், யாழிற்
சமைந்தொளிரும் பண்ணிவற்றை 'இளி'
என்பார்கள்
ஈரத்தால் விளங்குவதே இளமை, இன்ப
ஏணியிலே முதற்படி, நற்கலைகள் யாவும்
சேரத்தான் முந்துகின்ற கூடம், வைகல்
தோன்றுகின்ற செஞ்சுடர் முற்பிறை யின்கீற்று

12

காலையெனும் பருவத்தின் காலைப் போது
கல்வியெனும் பாலருந்தி மகிழும் செவ்வி
நாளைவரும் முதுமையெனும் விழுது தோன்ற
நனிதிகழும் திண்கிளைகள், கள்வ ழங்கும்
பாளை. இந்தப்பருவம் இதுமுறை பிறழ்ந்தால்
பயனெல்லாம் பதராகக் குவிந்து வேகும்
சூளையிலே தன்னையும் தான் சூழ்ந்திருக்கும்
தரணியையும் வைத் தெரித்துச் சாம்பலாக்கும்

13

அச்சமிலாப் பருவமிஃது அடக்க மென்னும்
அணைகடந்து நமையிழுத்துச் செலமுன்னிற்கும்
துச்சமென முன்னோரைச் சொல்லத் தூண்டும்
துன்பத்தை இன்பம்போல் சுட்டி நிற்கும்
நச்சுவினை வாக்கும்விளை யாட்டை நாடி
நயமாக அழைத்தாழ்த்தி வைக்கும், தூய
விச்சைகளைத் துன்பமென விளம்பி நிற்கும்
வேண்டாத தீமைகளை விரும்பிச் சேர்க்கும்

14

எதிர்காலச் சிந்தனையை எளிமையாக்கி
இப்பொழுதைத் தன்னலத்தை இமய மாக்கி
புதிதாகக் காட்டிவிடும் தசை விருப்பம்
பொய்யினைமெய்க் காதலெனப் புகைத்துக் காட்டும்
முதியோர்கள் அறவுரையாம் மாணிக்கத்தை
முற்றத்தில் வீசிவிட்டுச், சுயநலத்தால்
சதிசெய்வோர் மயக்குரைக் குப்பையைத் தாங்கும்
தலையாய கடமைகளைத் தரையில் வீசும்

15

கூரியதோர் வாளொக்கும் இளமை நல்ல
குறிக்கோளில் லாதவரை அதுவே கொல்லும்
நேரியதோர் வழிகாட்டி நேராவிட்டால்
நெருப்பொளி காண் விட்டிலென நினைவளிக்கும்
காரியத்தைக் கடமையினைக் கண்ணாக் கொண்டு
கட்டிளமைப் பருவத்தைக் காத்தல் வேண்டும்
வீரியத்தால் முற்றிப்பின் பழாத காயை
வெம்பலென வீசிவிடும் உலகம். காண்பீர்!

16

வற்றாத அருளிளமைத் தத்து வத்தை
வாயார முருகனென வழுத்துகின்றோம்
முற்றாத சிற்றிளமைப் பருவத்தே முன்
முகிழ்த்தொளிரும் தெய்வநிலை இளைஞர் பல்லோர்
பற்றேறும் புராண இதிகாசந் தம்முள்
பார்போற்ற விளங்கிடுவார் சிலரைக் காண்மின்!
கற்றோர்கள் ஏத்துகின்ற கண்ணன் ராமன்
களம்வென்ற அபிமன்னன் கனிந்த அன்பால்

17

இறைவனைத் தன்முன்பழைத்த பிரகலாதன்
எழில்துருவன் எல்லோரும் இளைஞரன்றோ
முறைமுறைசெந் தமிழிசையை வாழவைத்த
மூதற்குரவர் சம்பந்தர், வேதம் நான்கை
நறையொழுகு செந்தமிழால் நாட்டிவைத்த
நம்மாழ்வார், தெய்வீகத் தத்துவத்தைத்
துறைதெரியக் காட்டியமெய் கண்டார் எல்லாம்
தொக்கஇதழ் விரியாத சுடர்மொட்டுக்கள்.

18

கரிகாலன் போன்ற அரசிய லிளைஞர்
கருவியறி வியலில்ஸ் டிவன்சன் போன்றோர்
பெரியோர்கள் போற்றுகின்ற பெரியோரானார்
பேசுவதை மிகக்குறைத்துச் செயலை மேவிப்
புரியாத பழமையினைப் புதுமையாலே
புரியவைத்துப் பொல்லாங்கைப் பொசுக்கிவிட்டுத்
தெரியாத உண்மைகளைச் சிந்தித்தாய்ந்து
தெரிவிக்கக் கொழுந்துவிடும் பருவம் ஈதே

19

கலிகாலக் கொடுமைகளைக் களைய நிற்கும்
காளையரே! நீவிர்தாம் களத்தின் முன்பு
சலியாமற் போரிட்டுச் சமுதாயத்தைத்
தாக்கிவரும் தணல்அவியச் செய்தல் வேண்டும்
தொலையாத பொய்ம்மை அரசியல்சூ தாட்டச்
சூழலுக்கும் கையூட்டுப் பேய்களுக்கும்
பலியாகிக் குலையாமல் பண்பாட் டோடு
பழந்தமிழர் தூயநெறி பரப்பி வாழ்மின்!

20

கடைத்தெருவில் பேருந்து நிலையந் தம்மில்
கல்லூரிக்குள் வெளியில், பூங்காக் குள்ளே
படக்குடிலில் பார்க்கின்றேன் இந்த நாடு
பயந்தெடுத்த இளைஞர்களை அடடா' வெட்கம்
சடைப்பரட்டைத் தலை, உடைகள்? சடையில்லாத
தமிழ்இளையர், உடைநடைகள்? மேலைநாட்டுக்
கடைப்பட்ட நாகரிகம் அவற்றையும் தரம்
காணமற் பேணுகின்ற கதையென் சொல்வேன்?

21

இனியேனும் இந்நாடீன்ற என்னரும் இளஞ் செல்வர்காள்!
முனிவேதுமின்றி மூத்த முத்தமிழ் மரபைப், பண்பைக்
கனிவாகக் கொண்டு கூறும் கடமையைப் பண்போ டேற்று
நனிநீடுதொண்டால் நாட்டை நலமுறச் செய்தல் வேண்டும்

22

தேர்ந்தசீர் திருத்தம் பேசிச் சீரையே திருத்த இங்கு
நேர்ந்துள சிலவற்றைநீர் நினைந்தறிந் தொதுக்கல்வேண்டும்
கூர்ந்தநற் சிந்தையாலெங் குரவர்தம் சொல்லைப் போற்றி
ஆர்ந்தநற் பேறுற் றின்பம் அகத்துறத் தழைத்தல்வேண்டும்

23

இனித்தமிழ் நாட்டின் தலைவிதி நும்போல்
இளைஞர்தங் கைகளிற் கொடுத்துப்
பனித்துயர் நீங்கப் பார்த்திடும் எண்ணம்
பக்குவப் பட்டவர் தமக்கு
முனைத்திடல் கண்டு மூங்கையைப் போல
மொழிந்திட அஞ்சுவர் சிலபேர்
மனித்தர்களாக இம் மாநிலத்துள்ளார்
மதித்திட மாற்றி வாழ்ந் தருள்வீர்!

24

நீதியும் தமிழர் நியதியும் பேணி
நேர்மைசால் நெஞ்சமும் கொண்டு
ஓதியும் உணர்ந்தும் உயரற நெறியில்
ஒழுகியும் காட்டிநற் பணிக்கே
பாதிநல் லுழைப்பைப் பகுத்துநற் றியாகப்
பண்பினை நண்பினை வளர்த்துச்
சாதியும் சமயப் பூசலும் தணியச்
சமநிலைத் தொண்டுசெய் தோங்க

25

வேண்டியிவ் வன்மை இறைதர நாளும்
விருப்புடன் வணங்கி நிற்கின்றேன்
ஈண்டிய அறிவோ டியங்கிடும் மேலோர்
இளைஞர்கட் குறுதுணை புரிந்தே
தூண்டிநல் வாழ்வைத் துலக்கிடல் வேண்டும்
தூயநன்னெறி யுலகெங்கும்
மீண்டுவந் தொளிர இளைஞர்தம் மூளத்தில்
வீறெலாம் அருள்க செந்தமிழே!

ஆசிரியர் மணி

நெ. து. சுந்தரவடிவேலு.
சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்.

முதுபெரும் புலவர் மறைந்தார். ஆசிரியர் மணி மறைந்தார்.

தமிழ் உணர்வு மறைந்தது

தமிழ்த்தொண்டும், தமிழர் தொண்டுமே மூச்சாகக் கொண்டிருந்த நாதர் மறைந்துவிட்டார்.

பண்டிட் எஸ். எஸ். அருணகிரிநாதர் சென்ற திங்கள் மறைந்தார் என்ற செய்தி எனக்குப் பேரிடி; பலருக்குப் பேரிடி. தமிழர் வாழ்வை உயர்த்துவதற்கும் தமிழைக் காத்து வளர்ப்பதற்குமே, பல்வேறு இடிகளுக்கிடையே உயிரோடிருக்கிற என் தலைமுறையினர் பலருக்குப் பேரிடி.

பண்டிட் எஸ் எஸ் அ- மரபுவழிப் பண்டிதர் எனவே 'சீட்டு' இல்லாக் குறையை, அவரது மெய்ப் புலமை ஈடுகட்டிற்று. இன்றைய சீட்டாளிகளைப் போலன்றி பழுதறக் கற்றுத் தேறிய புலவராவார், ஆசிரியமணி அருணகிரிநாதர்.

தமது புலமையை தம்மையும் தம் குடும்பத்தையும் வளர்த்துக் கொள்ளப் பயன்படுத்தாத தொண்டர் அவர்.

பள்ளத்தில் வீழ்ந்துகிடந்த தமிழரையெல்லாம் தட்டி எழுப்பி, பெருவாழ்வு வாழச் செய்யவேண்டும் என்ற அவா, இளமையிலேயே அவரைக் கௌவிக் கொண்டது விளைவு?

நீதிக் கட்சியின் நாளிதழாக விளங்கிய 'திராவிட'னின் தொடக்க காலத் துணை ஆசிரியரானார்; நேரம் பார்க்காமல் நற்றொண்டு புரிந்தார்.

இன்றைய தமிழர்களைப் போலவே அன்றைய தமிழர்களும், தங்களுக்காக பாடுபடுபவர்களையும் அத்தகைய அமைப்புகளையும் ஆதரிக்கத் தவறினர்கள் திராவிடன்' வலிவிழந்தான்

பண்டிதர் அருணகிரி நாதர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியரானார். முதலில் முத்தியால்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியரானார். பின்னர் தங்கசாலைத்தெரு தொண்டைமண்டல துளுவவேளாளர் உயர்நிலைப்பள்ளிக்கு மாறினர். ஓய்வு பெறும் வரை, நெடுங்காலம் அப்பள்ளியிலே சிறந்த பணியாற்றினர்.

தமிழ் அய்யாக்களை நாலாந்தர ஆசிரியர்களாகக் கருதிய நிலைமுறையிலே நல்லாசிரியர் நமசிவாயர். மணி, திருநாவுக்கரசு, கா. ரா. கோவிந்தராசர், காழி. சிவ. கண்ணுசாமி, அருணகிரி நாதர் போன்ற சில தமிழ்ப் புலவர்கள் ஆசிரிய சமுதாயத்தின் கோடுகளாக மதிக்கப்பட்டார்கள். காரணம்?

அவர்களுடைய புலமை மெய்ப்புலமை; அதோடு ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து கொண்டே இருந்த புலமை. தமிழ்ச் சோலையிலே உயர்ந்ததுபோல், பிறதுறை அறிவையும் தேடிப் பெற்றவர்கள். அப்பெரியவர்கள் சைவப் பற்று மிகுந்த எஸ். எஸ். அருணகிரிநாதர் புகழ்பெற்ற அமெரிக்க நாத்திகர் இங்கர்சாலின் ஆங்கில நூலைப் படித்ததோடு நில்லாமல் என்னையும் படிக்கும்படித் தூண்டினர்.

அறிவை எவ்வளவு வளர்த்துக் கொண்டார்களோ அவ்வளவு உதவும் பண்பையும் வளர்த்துக் கொண்டு வாழ்ந்தவர்கள். அந்தத் 'தமிழர்கள்.

யார் செலவிலோ வண்டி கொண்டு வந்தால், நாலுமுறை 'பிகுவு' பண்ணி விட்டு, பின்னர் பரிந்துரைக்கச் செல்லும் வணிகர்கள் அல்லர். அவர்கள் இக்காலப் பொதுநல ஊழியர்களுக்கு நேர்மாறாக வாழ்ந்து தொண்டாற்றியவர்கள் அப்பெரியவர்கள்

தங்கள் சொந்தச் செலவில் அழைத்துக்கொண்டு போய் எண்ணற்றவர்களுக்கு கல்விக்கூட இடங்களும் பதவிகளும் வாங்கித் தந்த அப் பெரியவர்களை எல்லோரும் போற்றி மதித்ததில் வியப்பென்ன?

வசதி இருந்த என்னைக்கூட தன் செலவில் இங்கும் அங்கும் அழைத்துச் சென்று உதவியவர் பண்டிட் எஸ். எஸ். அருணகிரிநாதர். ஏதோ எனக்கு மட்டுமே செய்ததாகக் கருத வேண்டாம் எல்லோருக்குமே அப்படியே காலமெல்லாம் உதவியவர். நல்லாசிரியர் நமச்சிவாயத்தின் தோழராக இருந்த அவர் பிறர் கையை எதிர்ப்பார்த்து எதையும் செய்ததில்லை.

கோடை விடுமுறைக்கெல்லாம், எங்கள் ஊருக்கு அடுத்த வயலக்காவூருக்கு வந்து தங்குவார் அருணகிரிநாதர், அப்போது அடிக்கடி என் தந்தையைக் கண்டு உரையாடுவார். அவரே, அக்காலத்தில் திரு சேஷாசலம் அய்யரால் நடத்தப்பட்ட 'கலா நிலையம்' பத்திரிகையை என் தந்தைக்கு அறிமுகப்

படுத்தியவர். அவர் உரையாடல் தமிழ் ஆர்வம், தமிழர் முன்னேற்றம், உலகியல் அறிவு செறிந்ததாக இருக்கும். சிறுவயதில் அப்படிப்பட்டவர்களின் பேச்சைக் கேட்ட வாய்ப்புகள் பிற்காலத்தில் எனக்குக் கைகொடுத்தன

பண்டிட் அருணகிரிநாதர், நீதிக் கட்சியின் தொடக்க காலத் தலைவர்களோடு நெருங்கிப் பழகியவர் அவர்கள் அனைவருடைய நன்மதிப்பையும் பெற்றவர். அதைவைத்து முதலாக்கிக் கொள்ளாத நல்லவா. தன் இருமகன்களின் அலுவலுக்காககூட அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்ளாத, தமிழர் தொண்டர் ஆவார்.

சர். ஏ. இராமசுவாமி முதலியாரின் தேர்தல் பிரச்சாரத்திற்கு அவரோடு எங்கள் செங்கற்பட்டு மாவட்டம் முழுவதும் பலமுறை சுற்றியவர் அருணகிரிநாதர். முதலியாரின் ஆங்கிலச் சொற்பொழிவை அப்போதைக் கப்போது அருமையாக, உணர்ச்சி குறையாமல், மொழி பெயர்க்கும் ஆற்றல் பெற்றிருந்த பண்டிட் எஸ். எஸ் ஏ அகந்தை அற்று வாழ்ந்தார். எல்லோரோடும் கலகலப்போடு பழகினர். அதே நேரத்தில் கொள்கைப் பிடிப்போடு வாழ்ந்தார்

இந்தி ஆதிக்கம் தமிழுக்கும் தமிழர்களுக்கும் கேடு விளைவிக்கும் என்று உணர்ந்த தந்தை பெரியார் 1938-இல் முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கி சிறைசென்றதும் சில ஆயிரம் தமிழ் மறவர்களை சிறைக்கு அனுப்பியதும், தமிழக வரலாற்றின் இடம் பெற்ற பகுதியாகும்.

அப்போரில் பெண்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும் பெண்கள் அணி மறியலில், முதல்நாள் டாக்டர் தருமாம்பாள் சிறை சென்றூர். அடுத்த நாள் எஸ். எஸ் அருணகிரிநாதரின் அருமை மனைவியார் உண்ணுமலை அம்மையார் தமிழ் காக்க சிறைக் கோட்டம் புகுந்தார்.

இத்தனைத் தமிழ்ப் பற்றும், தியாகத் தழும்பும் கொண்ட இக்குடும்பம். பெரியார், அண்ணு, குத்தூசி குருசாமி ஆகியோருக்கு மிகவும் வேண்டிய குடும்பம். பண்டிதர் எஸ். எஸ். அ. சாதி வேற்றுமை ஒழிய வேண்டுமென்ற கருத்து கொண்டிருந்தார்.

என் கலப்புத் திருமணத்தை ஒட்டி சென்னை கோகலே மண்டபத்தில் தந்தை பெரியார் தலைமையில் செட்டி நாட்டரசர் முத்தய்யாச் செட்டியார், முன்னுள் அமைச்சர் எஸ். முத்தய்யா

முதலியார் ஆகியோர் வாழ்த்திய பாராட்டு விழாவிலே பூரிப் போடு கலந்துகொண்ட என் உறவினர்களில் ஒருவர் பண்டிதர் எஸ். எஸ். ஏ ஆவார்.

வாதத்திற்கு இடமான பல கொள்கைகளில் இயக்கங்களில் தீவிரமாக ஈடுபட்டிருந்த பண்டிதரை. அவரோடு வேலை பார்த்த எல்லா ஆசிரியர்களும் எல்லாச் சாதியினரும் மதித்தனர்; நேசித்தனர், ஏன்? எல்லோரிடமும் இனிமையாகப் பழகியதால். எல்லோருக்கும் பொதுவான பள்ளிக்கூடத்தைப் பிரச்சாரக் கூடமாக மாற்ருத நெறியாளர் அருணகிரிநாதர். இந்தி எதிர்ப்பு கிளர்ச்சியில் இவரோடு இணையருது தொண்டாற்றிய மயிலை சிவமுத்துவும் அத்தகைய நெறியாளர். கடுமையான சில நெறிகளை வகுத்துக்கொண்டு, முள் நிறைந்த அந்த ஒற்றையடிப் பாதைகளில் உறுதியாக நடந்ததாற்தான், விழிப்பில்லாத காலத்திலேயே, விளம்பரம் விரும்பாத அப் பெரியவர்களால், பயனுள்ள பணிகளைச் செய்ய முடிந்தது.

ஒரு சமயம் அறிஞர் அண்ணு சென்னை மாநகராட்சி உறுப்பினர் பதவிக்குப் பெத்துநாய்க்கன்பேட்டையில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து எம். பாலசுப்ரமணியம் எம். ஏ. போட்டியிட்டார் போட்டியோ கடுமை. திரு. வி. க காங்கிரஸ் வேட்பாளராகிய எம் பாலசுப்ரமணியத்திற்காக, சண்டமாருதப் பிரசாரம் செய்தார். அண்ணுவிற்காக அருணகிரிநாதர் மேற்கொண்ட பிரசாரமும் அதற்கு இளைக்கவில்லை.

இந்த நூற்ருண்டின் இருபதுகளிலேயே பன்னிரண்டு புதினங்கள் — சில துப்பறியும் புதினங்கள் — எழுதியவர் எஸ் எஸ் அ சிறுகதைத் தொகுப்புகள் இருபத்தைந்தை எழுதித் தந்தவர் அவர். அவர் எழுதிய நூல்கள் அத்தனை. பாட நூல்களும் பலப்பல. மொத்தத்தில், பயனுள்ள நல்ல தமிழ் நூல்கள் என்பதை எழுதி. வெளியிடச் செய்து, தமிழ்த்தாய்க்கு தொண்டாற்றி, 1957-இல் மாணவர் மன்றவெள்ளி விழாவில், நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் ‘ஆசிரியர் மணி’ என்று பட்டம் சூட்டப்பெற்ற என் வழிகாட்டி ஆசிரியர் மணி.

பொதுத் தொண்டிற்கு நெறி காட்டிய நல்லோர், தமிழ்ப் பெருந்தொண்டர், தமிழரின் பாதுகாவலர் பண்டிட் எஸ் எஸ். அருணகிரி நாதர் மறைந்தார் என்பதை என்ஞல் செறிக்க முடியவில்லை. என் செய்ய? இதுவே உலகம். இதற்குள் எத்தனை தோழரோடு தோழர் மோதல்கள்!

ஐயவி

நெல்லை ந. சொக்கலிங்கம், எம். ஏ.,
ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி – 10.

எத்தனையோ பழமைப் பண்பு தோய்ந்த பழக்க வழக்கங்களைத் தங்கள் வாழ்வில் பின்பற்றி வந்துள்ளனர் பண்டைத் தமிழ் மக்கள். அவற்றுள் ஒன்றாகிய ஐயவி புகைத்தலைப்' பற்றி அறிவது பயன் வழங்கும் செய்தியாகும்.

ஐயவி — பொருள் விளக்கம்

ஐயவி என்பது வெண்சிறுகடுகு ஆகும், இதனைப் பயிரியல் நூலார் Brassica Alba, Brassica Hirta என்றழைப்பர். இச் சொல்லின் பல்வேறு பொருளையும் பொருள் விளக்கத்தினையும் முதற்கண் காண்போம். கதிரைவேற்பிள்ளை பதிப்பித்துள்ள மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்ச்சொல் அகராதியில் குறிக்கப் பெற்றுள்ள பொருள் வருமாறு :

1 "ஐயவி — 1. கடுக்காய் (மலையகராதி) 2 கடுகு (பிங்கலந்தை 1730) 3. சீந்தில் (இராசவைத்) 4. துலா மரம்; இது கதவிற்குக் காவலாகப் புறவாயிலிலே தூக்கப்படும் என்பர். அம்புக் கட்டு என்பாருமுளர் (பதிற்றுப்பத்து) 5. வெண்சிறுகடுகு (புறப்பொருள்)"

2 மதுரைத் தமிழ்ப் பேரகராதியும் இதையே தொகுத்துரைக்கின்றது. வையாபுரிப் பிள்ளை தலைமையில் தொகுக்கப் பெற்ற தமிழ்ச் சொற் களஞ்சியம் கூறுவதாவது

3 "ஐயவி aiyavi, n. 1. White Mustard, Brassica alba; வெண்சிறுகடுகு 'ஐயவி புகைப்பவும்' (புறம் 98, 15) 2. Indian Mustard (see கடுகு (திவா.) 3. A weight ஒரு நிறை (தொல். எழுத்து 164) Chebulic Myrobalan. See கடுக்காய் (மலை). 5. Upright bar for the gate

---

1 தமிழ்ச் சொல்லகராதி — பக்: 676; 1910
2 மதுரைத் தமிழ்ப் பேரகராதி பக்: 346; 1937
3 Tamil Lexicon Vo. 1 Part 1 பக்: 580; 1924

of a fort; கதவிற்குக் காவலாகப் புறவாயிலிலே தூக்கப்படும்] துலாமரம். 'பூணு ஐயவி தூக்கிய, (பதிற்றுப் 16) 6. Bundle of arrows; அம்புகளின் கட்டு (பதிற்றுப் — 16 உரை.)" இனி, நிகண்டின் கூற்றினைக் காண்போம்.

4 'ஐயவி கடுகு' என்றும்.

5 'அந்தில் கடிப்பகை ஐயவி சித்தார்த்தம்
வெண்சிறு கடுகென விளம்ப லாகும்' என்றும்

பிங்கலந்தை பேசுகின்றது மேலேகண்ட பொருள் விளக்கங்களைக் கொண்டு. ஐயவி என்பது வெண்சிறு கடுகினையும், ஒரு நிறைப் பெயரையும், கடுக்காயினையும், அரணின் புறவாயிலில் தூக்கப்பெறும் துலாமரத்தையும், அம்புகளின் கட்டினையும் குறிக்கும் என்பது போதரும். இனி, இதன் பல்வேறு நிலையினையும் பொருட் சிறப்பினையும் தனித்தனியே காண்போம்

ஐயவிக்குரிய வேறு பெயர் :

ஐயவியைக் குறிக்கப் பண்டைத் தமிழ்ச் சான்றோர், கடிப்பகை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். இதனைக் 'கடிப்பை' எனவும் குறிப்பிடுவர்.

6 "கடிப்பை Katippai n. கடிப்பகை White mustard. see வெண்கடுகு (மு. அ)"

மணிமேகலையில் வரும் இக்கடிப்பகை என்ற சொல்லிற்கு விளக்கம் கூறப் புகுந்த உ வே. சா அவர்கள் 7. வெண்சிறுகடுகிற்கு கடிப்பகை யென்னும் பெயர் வந்ததற்குக் காரணம் இதுவே; கடி — பேய்; 'குறுநடைப் புதல்வர்க்குக் காவற் பெண்டிர் கடிப்பகை யெறிந்து தூபங்காட்டித் தூங்குதுயில் வதியும்' (காதை 7 57—9) எனவும், 'அரவாய்க் கடிப்பகை ஐயவிக் கடிப்பகை' (7:73) எனவும் பின்பு வருதல் காண்க. சந்திராபீடனென்பவனது தலையில் வெண்சிறுகடுகு அப்பியிருந்ததாக, காதம்பரி என்னும் வடமொழி நூலிலும் கூறப்பட்டுள்ள

---

4 பிங்கல நிகண்டு; 1730 கழகப் பதிப்பு 1968
5 ,, : 2939 ,, ,,
6 Tamil Lexicon Vol, II Part 1. பக்; 669; 1926
7 மணிமேகலை, காதை 3. வரி 134 உ. வே. சா. பதிப்பு 1965

தென்பர். 8. "கடிப்பகை—பேய்க்குப் பகையாகவுள்ளதென்று பொருள்; அரவாய்க் கடிப்பகை — அரம் போன்ற வாயினை யுடைய வேப்பிலை. ஐயவிக் கடிப்பகை — வெண்சிறுகடுகு; இவை பேய்க்குப் பகையென்பதைப், புறநானூறு 281-ஆம் செய்யுளாலும் உணர்க. பேய் முதலியவைகள் அணுகாதிருத் தற்கு இருவகைக் கடிப்பகையும் கூறப்பட்டன," என்னும் அடிக் குறிப்புக்களை ஒப்பிட்டுணர்தல் வேண்டும்.

9 "கடிப்பகை காணும் காட்சிய தாகிய
விரைமலர்த் தாமரை வீங்குநீர்ப் பரப்பின்"

என வரும் சிலப்பதிகார வரிகளுக்கு விளக்கமுரைக்கும் அரும் பதவுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் 'கடிப்பகை' என்பது 'வெண்சிறுகடுகே' என்றனர்.

10 இதே பொருளைத்தான் டாக்டர் ச வே சுப்பிரமணியமும் கொண்டுள்ளார். எனவே, ஐயவிக்குக் கடிப்பகை என்று வேறு பெயரிட்டு வழங்கி வந்துள்ளமையும் அவ்வெண்சிறு கடுகு பேய்க்குப் பகை என்பதும் தெளிவாகின்றது.

ஐயவி அப்புதல் :

குழந்தைகளுக்குப் பேய், பிசாசு முதலியன தீண்டாதிருக்க வேண்டி வெண்சிறுகடுகினை அரைத்து உச்சியில் அப்புவது பண்டைக் கால வழக்கமாக இருந்து வந்துள்ளது இதனை 11 "ஐயவி அப்பிய நெய்யணி முச்சி" என்று மணிமேகலை கூறுகின்றது இதன் அடிக்குறிப்பில், "வெண்சிறு கடுகை யப்பிய நெய்யை யணிந்த மயிர்முடி; பேய் தீண்டி வருந்தா வண்ணம். குழந்தைகளின் மயிர் முடியில் வெண் சிறு கடுகை அப்புதல் மரபு" என்கிறார் உ. வே சா.

மாலை நேரம் வந்தவுடன் வேடர் குலத்துத் தோன்றிய முதியவளாகிய குறத்தி வெண்சிறு கடுகின் புகையைச் சுற்றிப் பின் உணவூட்டித் திண்ணனாரைத் துயில் கொள்ளச் செய்தனளாம். இக்கருத்தைச் சேக்கிழார், கண்ணப்பர் புராணத்தில் குறிப்பிடுகின்றார்.

8 மணிமேகலை காதை 7. வரி 73 உ, வே. சா. பதிப்பு 1965
9 சிலப்பதிகாரம் காதை 6 வரி 147-8; உ. வே. சா. பதிப்பு 1968
10 Cilappatikaram - Descriptive Grammer with Index
Page 90, 1965.
11 மணிமேகலை, காதை 3 வரி 134; உ. வே, சா. பதிப்பு 1965

12 " அலர்பகல் கழிந்த அந்தி ஐயவிப் புகையு மாட்டி" என்பதே அவ்வரி. இதற்கு, சி. கே. சுப்பிரமணிய முதலியாரின் குறிப்புரை வருமாறு. "புகையுமாட்டி கடுகுப்புகை கமழச் சுற்றிக் கண்ணேறு கழித்தல். இதனல் சிறுரை விடம், கொடுந் தெய்வப்பிடை, பிணி முதலியவையும் தாக்கா என்பர், " பெரிய புராணத்திற்குப் பின் வந்த பிற இலக்கியங்களில். இவ் வாறு ஐயவி அப்பும் பழக்கம் கூறப்படுகின்றதா என்பது ஆராய்தற்குரிய தொன்ருகும்.

தமிழ்ச் சமுதாய ஒழுகலாற்றைப் பற்றிக் குறிப்பிடும் டாக்டர் கே. கே. பிள்ளை. 13 ,. A popular belief was that infants were liable to be affected by the mischievous intentions of ghosts. Therefore, whenever an infant was taken out of the house, the mother carried with her twigs of margosa leaves in the belief that they would serve to ward off danger to the children ...The white mustard was also used as a protection; in particular, a paste made out of it was smeared on the heads of children" எனக் குறிப்பிடுகின்ருர். இவை யவற்ருல், ஐயவியைச் சிறு குழந்தைகளின் உச்சியில் அரைத்து அப்புவது பண்டைக் காலப் பழக்கமாக நிலவி வந்தது என் பது போதரும்.

ஐயவி புகைத்தலும் தூவுதலும்:

போர்க்களத்தில் புண்பட்ட மறவனைப் பேய்கள் அண்டா திருக்கவேண்டிப் பாதுகாப்பாக ஐயவியைப் புகைப்பது பண் டைக் காலத்து வழக்கமாக இருந்து வந்துள்ளது. அதிக மானைப் பாராட்டிப் பாடும் ஒளவையார். 14. "கூற்றுவன் வந்து அணுகாதிருக்கக் கருதி ஐயவி புகைப்பர். அப்படிப் புகைத்த போதிலும் கூடக் கூற்றுவன் புறத்தில் நின்று உயி ரைப் பறித்துச் செல்லுவான். அதுபோல நீ பகைவர் தம் உயிரைக் கொண்டு போகும் கூற்றினை ஒப்பாய்" என்கின்ருர்.

---

12 திருத்தொண்டர் புராணம், இரண்டாம் தொகுதி பக்: 863
சி கே. சுப்பிரமணிய முதலியார் பதிப்பு, 1940.

13. A Social History of the Tamils Page: 539—40; 1969.

14 புறம்; 98; உ. வே. சா. பதிப்பு; 1971

15 காஞ்சித்திணையுள் பேய்க்காஞ்சித் துறையாக வரும் அரிசில் கிழாரின் புறநானூற்றுச் செய்யுளும் ஐயவி பற்றிச் சொல்கின்றது அதில், போரில் பெரும் புண்பட்டு வீழ்ந்த மறவனுக்கு மருத்துவம் செய்வோர், மனையைத் தூய்மை செய்து, வெண்சிறுகடுகினைத் தூவி, ஆம்பல் குழலை ஊதிக் காஞ்சிப் பண் பாடி, நறுமணம் கமழும் அகில் முதலியவற்றைப் புகைத்துக் காத்து நின்றதாக வருகின்றது. இதனை உ. வே. சா. பேய்க்காஞ்சித்துறையுள் அடக்குவர்.

16 "இன்நகை மனைவி பேய்ப் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாக் காஞ்சி"

என வரும் தொல்காப்பிய வரிகளை விளக்கும்போது, புறம் — 281-ஆம் பாடலை இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் எடுத்துக் காட்டினர். எனவே 17 ஔவை துரைசாமிப் பிள்ளை இப்புறப்பாடலைத் தொடாக்காஞ்சித்துறை என்று கூறியுள்ளமையும், இவண் காணத்தகுவதொன்றாகும். 18 " In order to ward off the menace from these spirits, the house-wife spread some mustard seeds around the beds of the inmates, burnt camphor and incence and often kept awake till late at night, singing songs attuned to hhe Kaanchippan, appropriate to the occasion என்பதும் அறியத்தக்கதாகும்.

புறத்துறை இலக்கணத்தைப் புதுக்கியும் பெருக்கியும் தருகின்ற புறப்பொருள் வெண்பாமாலைக் காஞ்சித்திணையில்,

19 "அடலஞ்சா நெடுந்தகைபுண்
தொடலஞ்சித் துடித்துநீங்கின்று" என்று கொளுவும்
ஐயவி சிந்தி நறைபுகைத் தாய்மலர்தூய்க்
கொய்யாக் குறிஞ்சி பலபாடி — மொய்யிணர்ப்

---

15 புறம்: 281 உ. வே. சா. பதிப்பு; 1971

16 தொல் பொருள் புறத்திணை 19 இளம்பூ: புறத்திணை 24 நச்சர் உரை

17 புறம்: 281; ஔவை துரைசாமிப் பிள்ளை உரை, கழகப் பதிப்பு; 1962

18 A Social History of the Tamils Part 1, Dr. K. K. Pillai, Page: 539' E 1969

19 புறப்பொருள் வெண்பாமாலை, காஞ்சிப் படலம்: 19; உ. வே. சா. பதிப்பு: 1915

பூப்பெய் தெரிய னெடுந்தகைபுண் யாங்காப்பப்
பேய்ப்பெண் பெயரும் வரும்''

என்று விளக்க வெண்பாவும் குறிப்பிடுகின்றன. இனைய காரணங்களினால் புண்பட்ட மறவனைப்பேய் அணுகாதிருக்க வேண்டும் எனக் கருதி அவனைச் சுற்றி வெண்சிறுகடுகும் பிற வும் சிதறியிருந்த செய்தி புலனாகிறது. இவ்வாறு ஐயவி தூவு வது போல், ஐயவி புகைப்பதுமுண்டு. இதனை,

20 "வேம்புசினை யொடிப்பவுங் காஞ்சி பாடவும்
நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்
எல்லா மனையும் கல்லென் றனவே''

என வரும் வரிகளால் உணர முடிகின்றது.

ஐயவி — நிறைப்பெயர் :

ஐயவி ஒரு நிறைப்பெயர் என்று அகராதிகள் கூறுகின்றன. தொல்காப்பியத்தில் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப் பெயரும் தம்மிற் புணருமாறு உணர்த்துகின்ற,

21 'உயிரும் புள்ளியும் இறுதி யாகி''

என்று தொடங்கும் நூற்பாவிற்குக் 'கொள்ளே ஐயவி' என்று எடுத்துக் காட்டியுள்ளனர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும், ஏகாரம் பெற்றுத் தம்முன்னர்த் தம்மில் குறைந்து வருவதற்கு எடுத்துக்காட்டாகவே இதனைக் கூறினர். 22 "இலக்கண விளக்க'' ஆசிரியர் வைத்தியநாத தேசிகர் தாமே இயற்றியுள்ள உரையில் இவ்வெடுத்துக் காட்டினையே காட்டியுள்ளார். ஆக, இவ்வுரையாசிரியர்களின் மேற்கோள்களை நோக்கும்போது, ஐயவி என்பது நிறைட்பெயர் ஆகும் என்பதும் உறுதியாகின்ற தன்றோ.

தெய்வம் விரும்பும் ஐயவி :

வாயிலின் அழகினையும் அமைப்பினையும் கூறும் நக்கீரர்,

23 "ஐயவி அப்பிய நெய்யணி நெடுநிலை"

---

20. புறம் : 296; உ வே. சா பதிப்பு; 1971
21 தொல் எழுத்து; 164, நச்சர் ; 165 இளம்
22 இலக்கண விளக்கம் : 78 கழகப் பதிப்பு, 1973
23 பத்துப்பாட்டு நெடுநல் : 85—6; உ வே. சா. பதிப்பு, 1931

என்கின்றார். இதற்கு நச்சினார்க்கினியர், "வெண்சிறுகடுகு அப்பிவைத்த நெய்யணிந்த நெடிய நிலையினையுடைய" "அதில் தெய்வத்திற்கு வெண்சிறுகடுகும் நெய்யுமணிந்தது" என்றும் விளக்கம் கூறியுள்ளார். மேலும் தெய்வங்கள் நெடுநிலையில் விரும்பி உறையும் என்பதனை,

24 "அணங்குடை நெடுநிலை"

என்ற வரி விளக்குகின்றது. தெய்வங்கள் நிலைகளில் உறையும் என்னும் நம்பிக்கை கொண்டிருந்ததனாலேயே ஐயவியை அப்பினர் அன்று. இதனை, வலியுறுத்துமாறு அமைவதே,

25 'அணிநில மணிந்து தேங்கொள் ஐயவி சிதறினாரே' என்ற சிந்தாமணித்தொடர் ஆகும் 'தெய்வங்கள் இனிதாகக் கொண்ட ஐயவி' என்று நச்சினார்க்கினியர் உரை வரைந்துள்ளார். முருகாற்றுப்படுத்த உருகெழுவியன் நகரினைக் கூறவந்த நக்கீரர், பழமுதிர் சோலையின் பாங்கினைப் பரவிப் பாடும்போது,

26 'நெய்யோ டையவி அப்பி' எனக் கூறுவார். நெய்யுடன் வெண் கடுகின் திரண்ட விதைகளைக் கலந்து மாளிகை இடமெங்கும் விளங்கும் படிப்பூசியிருந்தனர் என்பதனை,

27 "நெய்யொடு இமைக்கும் ஐயவித் திரள்காழ்
விளங்குநகர் விளங்க"

என விளக்குகின்றது நற்றிணை. எனவே, ஐயவியைத் தெய்வங்கள் விரும்பின என்று கருதி, அவ்வெண்சிறுகடுகினை நெடுநிலைகளில் பூசுவதும் நிலைகளின் பக்கங்களில் சிதறுவதும் பண்டைக்கால மரபு என்பது தெளிவாகிறது.

---

24 பத்துப்பாட்டு மதுரைக்: 353; உ வே சா. பதிப்பு, 1931
25 சீவகசிந்தாமணி: 113, நச்சர்; உ. வே. சா. பதிப்பு 1907
26 பத்துப்பாட்டு திருமுரு: வரி: 228.
உ. வே. சா. பதிப்பு 1931
27 நற்றிணை: 370; கழகப் பதிப்பு, 1967

ஐயவித்துலாம் :

வாயிற் கதவிற்குக் காவலாகப் புறவாயிலிலே தூக்கப் படும் துலாமரத்தை ஐயவித்துலாம் என்றழைத்தனர். ஐயவித் துலாம் என்பது 28 "மதில் உறுப்புகளுள் ஒன்று" என் கிறார் டாக்டர் ச. வே. சுப்பிரமணியம்.

29 'நற்றலைகள் இருக்கும் வலிநெருக்கு மரநிலையே" என வரும் சிந்தாமணி அடிக்கு விளக்கம்தர வந்த நச்சினார்க் கினியர். "தலைகளைத் திருகிக் கொள்ளும் வலியுடனே நெருக் குமரமாவது ஐயவித்துலாம்" என்றார். 30 'ஒரு மதிற்பொறி' என்கிறது தமிழ்ச் சொற்களஞ்சியம்.

மேலும் ஐயவி என்பதற்கு 'அம்புக்கூடு' என்றும் வேறு ஒரு பொருள் குறிப்பிடப் படுகின்றது. இதனை,

31 'ஓங்குநிலை வாயில் தூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீர் ஐயவி" எனவும்,

32 "கோடுறழ்ந் தெடுத்த கொடுங்கண் இஞ்சி
நாடுகண் டன்ன கணைதுஞ்சு விலங்கல்
துஞ்சுமரக் குழா அந் துவன்றிப் புனிற்றுமகள்
பூணு ஐயவி தூக்கிய மதில"

உவமையாகும் ஐயவி :

33 "ஐயவி அன்ன சிறுவீ ஞாழல்"

எனவரும் குறுந்தொகை வரிக்கு "வெண்சிறு கடுகைப் போன்ற சிறிய பூக்களையுடைய ஞாழல் மரத்தின் பூ" என்று

---

28 Cilappatikaaram Descriptive Grammar with Index
Page: 790, 1968

29 சீவகசிந்தாமணி: 102; நச்சர் உரை உ. வே. சா.
பதிப்பு: 1907

30 Tamil Lexicon. Vol II Part 1, Page: 669. 1929

31 பதிற்றுப்பத்து 3 ஆம் பத்து. பாடல் 2; உ, வே. சா.
பதிப்பு, 1957

32 பதிற்றுப்பத்து 2 ஆம் பத்து 6ம் பாடல் 2; உ. வே சா,
பதிப்பு, 1957

33 குறுந்தொகை: 50. நச்சர் உரை; உ. வே. சா.
பதிப்பு, '1962

நச்சினார்க்கினியர் உரை கூறினர். இங்கே, புலிநகக் கொன்றை யாகிய ஞாழலுக்கு 'ஐயவி' உவமையாகக் கூறப்பட்டது.

உலகியல் வாழ்வாகிய இல்லறத்தையும் தவமாகிய துற வறத்தையும் சீர் தூக்கிப் பார்த்தால், தவத்துக்கு இவ்வையம் சிறு கடுகளவும் நிகராகாது எனக்கூறும் புற நானூற்றுப் பாடலில்

34 "வையமும் தவமும் தூக்கில தவத்துக்
கையவி யனைத்து மாற்ரு தாகலின்"

என்று ஐயவி குறிக்கப்படுகின்றது. இவற்ருல் ஐயவியை உவ மையாகவும் ஒப்புமையாகவும் பயன்படுத்தினர் என்பது தேற்றம்.

ஐயவி விதைத்தல் :

வெண் சிறுகடுகை நிலத்தில் உழுது பண்படுத்தாதே விதைத்தனர் என்ற செய்தியினை

35 "தொய்யாது வித்திய துளர்படு துடவை
ஐயவி"

எனவரும் மலைபடுகடாத்தின் வரி விளக்குகின்றது. இவ்வரிக்கு, நச்சினார்க்கினியர், வெண்சிறுகடுகு உழாதே களைக்கொட்டால் அடிவரைந்து கொத்தும் தோட்டங்களிலே குழி விதைக்கப் பட்டனவாய் நெருங்கி விளைந்தன" என்று உரை வகுத்துத் தெளிவுறுத்தியுள்ளார்.

மகப்பேறும் ஐயவியும்

குழந்தை பெற்ற பெண்டிர் இவ்வெண்சிறு கடுகினைக் கலந்த எண்ணெய் தேய்த்து நீராடுவது வழக்கம். இவ்வாறு நீராடியதனை.

---

34 புறம் : 358 ஔவை. துரைசாமிப் பிள்ளை
கழகப் பதிப்பு, 1962

35 பத்துப்பாட்டு. மலைபடு ; 213-15 ; உ. வே. சா.
பதிப்பு. 1931

36 "ஐயவி அணிந்த நெய்யாட் டீரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈரிமை பொருந்த"

என்று நற்றிணை நவிலுகின்றது.

மருந்தாடும் ஐயவி :

வெண்சிறு கடுகைக் குழந்தைகளின் உச்சியில் பழங்காலத்தில் அரைத்து அப்பினர். அவ்வாறு செய்யக் காரணம் அணங்குகள் தீண்டாதிருக்கவே ஆகும் இது பழைய நம்பிக்கையில் எழுந்த ஒன்று சித்த மருத்துவத் துறையிலும் இவ் வெண்சிறு கடுகு மருந்துப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. இது குழந்தைகளுக்கு உண்டாகும் தோடங்கள் பூத பைசாச பார்வை, கடிகளின் குற்றம் முடக்கு வாயு இவை நீக்கும் என்று தமிழ் மருத்துவப் 'பொருட் பண்பு நூல்' நுவலுகின்றது. இதை வலியுறுத்துவதாக அமைவதே அகத்தியர் குணவாகடப் பாடல் ஆகும். அது:

37 "பாலக்கிர கம்பூத பைசாச மோட்டிவிடும்
ஆல விஷங்க ளாற்றுங்காண் — கோலமிகு
வள்ளைச் செவிமாதே மாபங்க நோய்விலக்கும்
வெள்ளைக் கடுகின் விதி"

என்பதாகும். இதன் பக்குவத்தையும் பயனையும் பகரும் தேரன்காப்பியம்.

38 "கடிப்பகை யெனவரு கடுகினை நாளும்
மிளகில வணத்தொடு மூன்றுமொன் ருக்கி
யடுபுன லருந்துமு னயிலவை கறைதொறும்
வளி முதன் மூலிகை வலியெலா மகலும்
பச்சடி முதற்கறி பண்பிஞு லயிலினு
நிச்சய மாயுள்நி கழ்பிணி யறுக்குமே"

என்பதனுல் ஐயவி தமிழ் மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் ஒரு மருந்துப்பொருளாகவும் விளங்கியுள்ளமை தெளிவாகும்.

---

36 நற்றிணை 40: கழகப் பதிப்பு, 1967
37 அகத்தியகுணவாகடம்
38 தேரன்காப்பியம்

இதன் பொதுத் தன்மைகளைப் பற்றியும் பயன்களைப் பற்றியும் கூறுகின்ற. 'Economic Botany' என்ற நூலின் கூற்று வருமாறு.

39 " White Mustard (Brassica Hirta) is a freely branching annual, 2 to 6 ft. in height, with yellow flowers, hairy lobed leaves, and a bristly bad with a long beak. The small round seeds (f. g. 223 C) are yellow on the outside and white within. They contain, among other substances, mucilage, proteins, a fixed oil and a glucose, sinalbin. When ground seeds are treated with water, this glucoside is broken down.

Through enzyme activity and yields a nonvolatile sulphur compound with a characteristic sharp taste and pungency. White mustard is used in medicine and as a contiment. The fixed oil is expressed and used externally as a counterirritant. It can also be utilized as a lubricant and illuminant."

நிறைவுரை :

மேலேகண்ட கருத்துக்களால் ஐயவியாகிய வெண்சிறு கடுகு தமிழ் மக்களின் வாழ்வில் எவ்வளவு பயன்பட்டது என்பது தெளிவாகிறது. ஐயவியைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருந்த காரணத்தினாலேயே அதனை உவமையாகக் கூடப் பயன்படுத்தினர். இதன் அருமையை அறிந்து மருந்தாகவும் பேய் முதலியன அண்டாதிருக்கவும் நிறைப் பெயராகவும், துலாமரமாகவும், நெடுநிலையில் அப்புகின்ற பொருளாகவும், பழந்தமிழர் பயன்படுத்தியுள்ளனர். மருத்துவப் பொருளாகவும் இது பயன்படுவதனால் முயன்று நம் வாழ்விலும் பயன்படுத்த முன்வருதல் வேண்டும்.

---

39 Economic Botany by Albert F. Hill. T. M. H. Publishing Company